தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௧௰	மலர்
ரு௩	சித்தார்த்தி - ஆனி, ஆடி	௩ ௪
	1979 ஜுன், ஜுலை, ஆகஸ்டு	

'து' என்னும் விகுதி

பேராசிரியர் கோ. வேங்கடாசலம் எம். ஏ.,
முதல்வர் பொறுப்பு, ஈ. வே. ரா. கல்லூரி, திருச்சி.

'து' என்பது அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி யாகும்''

என்பது தொல்காப்பியம். இதனையே,

''துறுடக் குற்றிய லுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை குக்குறிப்பின் ஆகும் ''

எனக்கூறும் நன்னூல். து. று. டு, என மூன்று விகுதிகளாகச் செயல்படுகிறது என்று அறியலாம்.

இனி, கீழ்வரும் சொற்றொடர்களைப் பார்க்கலாம்.

1. மரத்துக் கிளை
2. மரத்தடி

இதில் வருகின்ற அத்துச்சாரியை உடைமைப் பொருளைத் தரு வதைக் காணலாம்.

அடுத்து, கீழ்வரும் தொடர்களைப் பார்ப்போம்.

1. குண்டு கட்டு
2. குறுந் தாட்டு

இங்கு வரும் 'து' குறிப்பு வினைமுற்று விகுதி எனச் சொல்லப்படுகிறது. ஆனால் இதில், உடைமைப் பொருள் இழையோடுவதை உணரலாம்.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது 'து' உடைமைப் பொருளை உணர்த்தப்பயன்பட்டிருக்கிறது என்றே நோக்குவதில் பெரிய பிழை இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. இந்த 'து' [அத்து] தான் ஆறும் வேற்றுமை உருபாக அமைந்திருக்கின்றது. என்று நினைக்க இடனுண்டு. பற்றுக்கோடு என்னும் பொருள் தரும் ஒரெழுத்தொருமொழியாகிய 'து' என்பதே ஆறம் வேற்றுமை உருபுக்கு அடிப்படை என்னும் கரந்தைப் புலவர் கல்லூரி பேராசிரியர் பாவலர் பாலசுந்தரம் அவர்களின் கருத்து இங்கு ஆராய்தற்பாலது.

ஆக, 'து' ஒன்றன்பால் படர்க்கை விகுதியாகச் செயல்பட்டிருக்கிறது என்பதைச் சில வழக்குச் சொற்களைக் கொண்டு இப்போது பார்க்கலாம்.

1. அம்மா வந்தது
2. தங்கை சொன்னது
3. அண்ணன் அடித்தது.

இக்காட்டுகளில், உயர்திணையில் அஃறிணை ஒருமைப் படர்க்கை வினை வந்திருப்பதைப் பார்க்கலாம்.

"வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே

என்பது இலக்கணம். இந்த விதியை இவ்வழக்கு மீறி விட்டதா? ஒரு கோணத்தில் நின்று பார்த்தால், இந்த விதி மீறப்படவில்லை என்று கருத இடம் உண்டு. பாலுணர்வுக்கு அவசியமோ இடமோ இல்லாது, வினை ஒன்றனுக்கே தலைமை கொடுத்துப் பேசும் நிலையில்தான் மேற் சொன்ன காட்டுகளில் தந்துள்ள வாக்கியங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது 'து' என்னும் விகுதி Non-Sex மனநிலையில் தான், உயர்திணையின் வினை விகுதியாக வருகிறது என்பதைக் காணலாம்.

'து' என்னும் விகுதி அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை வினை

முற்று விகுதியாகச் செயல்படுவதோடு, வேறுவகையிலும் பயன்படுகிறது என்றும், குறிப்பாக, [1] உடைமைப் பொருளை உணர்த்தவும் [2] பால் உணர்வுக்கு அப்பாலான நிலையை உணர்த்தவும் பயன்படுகிறது' என்றும் இக்கட்டுரையின் கருத்து தெரிவிக்கிறது.

குறிஞ்சிப் பாட்டு

கே. சோமசுந்தரம், பி.ஏ., பி. எல்., தஞ்சை.

செந்தமிழ் வளஞ் சுரத்தலில் வற்றா ஊற்றாக விளங்கும் பத்துப் பாட்டின்கண், உள்ளத்தின் உயர்வுக்கு ஆக்க மருளி வாழ்வளிக்கும் ஒளிவிளக்காய்த் திகழ்வது குறிஞ்சிப் பாட்டாகும். இப்பாட்டு தமிழருக்கு உயிராகவிருக்கும் அகமாகிய உள்ள வளர்ச்சியினையும், அதன் அடிப்படையாகக் கொண்ட தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையினையும், உள்ளொளியினையும் அறிவிப்பதாகும். இப்பண்பாட்டு நூல் 261 அடிகளைக்கொண்டு பத்துப் பாட்டில் அறநெறிக்கும் அன்பு வழிக்கும் எட்டாதவகையில் எட்டாவது நூலாக இணைந்துள்ளது. இதன் இறுதியில் ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு' என்ற குறிப்பும் உணர்த்தப் பட்டுள்ளது. மற்றும் 'எத்திணை மருங்கில்' எனும் அகத்திணையியற் தொல்காப்பிய சூத்திர உரையின்கண், நச்சினார்க்கினியர் 'கபிலர் பாடிய பெருங் குறிஞ்சியில் வரையின்றிப் பூமயங்கியவாறு காண்க' என்பது ஈண்டு உணரத்தக்கது. இக்குறிப்பின் வழி இதனைப் பெருங்குறிஞ்சியெனத் தமிழ்ச் சான்றோர் வழங்குவராயினர் என்பதும் பெறப்படும். இப்பாட்டு, குறிஞ்சிப் பாக்களில் அளவாற் பெரியது; வளனால் உயர்ந்த சிறப்பு முடையது. இதனால் கபிலர் குறிஞ்சிக் கபிலரெனவும் பெரிதும் போற்றப்படுவாராயினர்.

ஆரிய அரசன் பிரகத்தன், தெய்வத்தன்மை பொருந்திய வடமொழிவேதத்தினை நன்கு கற்றறிந்த பெரியார். ஆரிய வேதத்தில் கற்பனவற்றைக் கற்றவர்; தமிழ் மறையிலும் கேட்பனவையும் கேட்டவர். இவர் வேதத்தின்கண், இறை, மக்கள், வாழ்க்கை இவை பற்றிய உண்மைகளையும் விரிவுகளையும் வேதாந்தத் தெய்வக் கொள்கைகளையும், இகபரவாழ்வுக்கு இன்றியமையாத சாதனங்களையும் நன்கு தேர்ந்தவர். ஆனால் அதனை ஆய்ந்து கற்ற ஆரிய மன்னன் கலங்கிய ஞானமே இடர்ப்பாட்டுடன் பெற்று, உயிர்த்துடிப்பும், உள்ளத் தவிப்பும் உடையவனாயிருந்தான்.

அதனை அவன் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டி, பாண்டிய நாட்டு மதுரையம்பதியில், சங்கப் புலவர்கள் பால், அந்தமிலின்ப மடைந்திடும் வழியினை அறிந்து கொள்ள அளவளாவ விரும்பினன். ஆங்கு சென்று சங்கப் புலவர்களது பாராட்டுக்குரிய கபிலரோடு, ஆரிய அரசர் பழகி அவர்பால் தமிழின் இனிமையினைச் சுவைத்து; அது இலக்கிய மரபோடு சிறப்பாகக் காட்டும் பேரின்பப் பேற்றின் பெற்றியினை யுணர்ந்தார்; அப்பேரின்பப் பேற்றினை ஆர்வமொடு ஆய்ந்தறிவதிலும் உண்மைப் பற்றும் கொண்டார். கபிலரும் அன்னார்க்கு ஞானக்கண் திறக்கும் தண்டமிழினை அறிவித்து வாழ்க்கைப் பயனை எளிதே பெறும் பொருட்டு காட்சியிலே கண்ட பொருளைக் கவிதையிலே தொகுத்துக்காட்டி, பைந்தமிழில் குறிஞ்சிப் பாட்டினைப் பாடியருளினர்.

வேதத்தின் உட்பொருளை நுட்பமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ளும் வகையில் வல்லாங்குடையது தமிழும் தமிழ் மறையுமென்பது வேத வல்லுனர்களது சித்தாந்தம்.

'பொய்கை முனி பூதத்தார் பேயாழ்வார்த ண்பொரு நல்வருங்
குருகேசன் விட்டுசித்தன்
துய்யகுலசேகரன் நம் பாணநாதன் தொண்டரடிப்பொடி
மழிசை வந்தசோதி
வையமெல்லாம் மறைவிளங்கவாள் வில்லேந்தும் மங்கை
யர்கோ னென்றிவர்கள் மகிழ்ந்துபாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெரியாத
மறைநிலங்கள் தெளிகின்றேமே'

எனப்படுதலான், ஈண்டு 'தெளியாத மறைநிலங்கள்' வேதமென்றும், அதன் உண்மைத் தத்துவத்தை தெளிவுபடுத்திக்கொள்ள இன்றியமையாது வேண்டியிருப்பன 'தமிழ் மாலைகள்' என்பதும் புலப்படும், 'எனவே, இவ்வுலகச் சிற்றின்பங்களில் உழலாது இம்மையிலே புலன்களைக் காவலிலே வைத்து இறையுணர்விலே பேரின்பப் பெருவாழ்வினை அடையும் தமிழ் மறையின் உண்மை புலனுகும் முறையினைக் கபிலர், ஆரிய மன்னருக்கு பேசும் இனிய தமிழால் எளிதில் விளங்குமாறு புகட்டுவாராயினர்.

கபிலர் நல்லிசைப் புலமைமாட்சியில் நனிசிறந்து விளங்கியவர்; தவநெறி வாழும் சிறப்புடையார்; அருட்புலவர்; சிந்தனைக் கலைஞர்

அறம் வளரும் நெஞ்சமுடையவர்; அன்பே கடவுள் என்ற கோட்பாட்டினை உருவாக்கிப் பேரின்பத்தில் ஆழ்கின்ற மாசறு காட்சியினையுடையவர்; ஒருமையில் நிற்கும் பெருமையாளர் தன்னையறிந்த தத்துவ ஞானி; அன்பு அருள் இன்பங்களின் நிலைக்களனான இறைவனது திருவருட் குறிப்புக்களை நன்குணர்ந்து அழகு தமிழால் அமிழ்தாகிய மெய்யின்பத்தை ஊட்டும் வித்தகர்; இறைபால் உயிரை இணைப்பதே இவரது உள்ளம்; மெய்ஞ்ஞானத் திருவாளன்; சாகாதிருக்க வாகான மெய்க்கல்வியினை வாய்க்கப் பெற்ற விஞ்ஞான விற்பன்னர்; அஞ்சுமடக்கி, ஆறுமகற்றி, ஏழ்கடிந்து உயிரனுபவமும் அருள் அனுபவமும் பெற்ற இறை அனுபவ அறிவோடிருக்கும் மாண்பினர்; என்றும் துரியம் கடந்த சுடரொளியைக் காணும் தகைமையாளர்; கவித்துவ ஆற்றல் அரும்பிய இவரது தெள்ளறிவிலே இறையறிவிலே இறையன்பும் சேர்ந்து மருவரு தமிழ்ப் புலமையினை முதிர்ச்சியடையச் செய்ததால். இவரது உள்ளம் இடைவிடாது பேரின்ப வீட்டிலே உலவும் பெருமை சான்றது. இவர் பாரிமகளிருக்கு வாழ்வின்பம் வழங்கச் செய்து பின்னர் பேரின்ப நிறைவெய்திட ஒழிவின்றி நிற்கும் தெய்வப் பொருளை ஒம்பிவடக்கிருந்த மெய்த்தவ மான்புடையார்.

கபிலர், தான் பெற்ற தமிழின்பத்தையும் அனுபவத்தையும் விழுமிய உணர்ச்சியையும் பிறரும் பெறுதல்வேண்டுமென்ற அவாவுடன் தெய்வத்தமிழுக்கு பணிபுரிவதே தவமாகக் கொண்டதினுன், இவரது வாக்கு அழகும் அமைதியும் மென்மையுங் கொண்டு தமிழுலகுக்கு அருமருந்தாய் நிலவியது. இவர், தமிழும் இறையின்பப் பெருநெறியும் பிரிப்பறியா தென்ற கருத்து கொண்டு அவற்றைப் பிணைத்து வைத்து ஓர் அரிய புரட்சியின் உருவாக்கிய பேரருளாளராய்ப் பிறங்கினுர். வாழ்க்கையினைச் செம்மைப்படுத்தி இன்பத்தையுண்டாக்கும் நோக்கங்கொண்டு, நல்லொழுக்கத்தை உணர்த்தி அறிவு கொளுத்தும் எண்ணத்துடன் தம் சீரிய அனுபவ இறைஞானத்தையும் குழைத்து, இவர் பாக்களை இயற்றுங்காலை, இவர் தம் பாக்களில் படிந்தோரது உள்ளத்தைத் திருத்தும் மாண்பினையும் பண்பினையும் பெற்றவராய்த் திகழ்ந்தார், மற்றும் வாழ்வின் உண்மைகளையும் மக்பதைப் பண்புகளையும் இவர் தக்க வகை முறைப்படி காட்டி உணரவைத்து புலன்களுக்கும் சிந்தனைக்கும் அலைகளை மன நிறைவுடன் எட்டும்படிச் செய்வதில் வல்லராய் வயங்கினுர்.

கபிலர், புலமை மாட்சியோடு வாய்மைக் குணமாட்சியும் பெற்றிருந்தார். இவர் தகாத வகையில் பாடிப் பரவி பரிசிலாகப் பொருளை ஏற்காது, புலவரினத்துக்கே பெருமித நிலையினை யளித்து

புரவலர்க்கும் 'நினக்கு யான் கொடுப்பக் கொள்க' எனக் கூறும் உத்தம வள்ளல் பெருமானாக விளங்கினார். உள்ளலர்ந்த தெள்ளறிவு, அடக்கம், அமைதி, தெளிவு, எளிமை, அகக்களிப்பு, விழுமிய ஆத்மஞான தத்துவம் ஆகிய இவைகளே கபிலர். இவரையும், இவர் தாமுணர்ந்து தெளிந்ததையும் குறிஞ்சிப் பாட்டில் குறிப்பாகக் காணலாம்.

கவிஞருட்ச் சிறந்த கவிஞராய் வயங்கிய கபிலர் பண்டைப் புலவர் பெருமக்களது பாராட்டுக்கு இலக்காய் இலங்கினர். பெரும் புலவர்கள் தம் பாக்களில் கபிலரைப் பற்றி 'நல்லிசைக் கபிலன்'; 'தாழாது, செறுத்த செய்யுட்செய் செந்நாவின், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்'; 'பொய்யா நாவிற் கபிலன்'; 'வாய்மொழிக் கபிலன்'; 'குறிஞ்சிக் கபிலன்'; 'நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம், புலனழுக்கற்ற அந்தணாளன்' எனச் சுட்டிப் பாடுதல் ஒரு அரிய வழக்கென்க. மற்றும் உரையாசிரியச் சான்றோர்களும் ஆங்காங்கு 'இது கபிலரது பாட்டு' என்று அதன் தனித்தன்மையினைச் சுட்டிப் பாராட்டும் முகத்தால், கபிலர்பெருமான் தனது பாட்டுத் திறத்தாலே பாரினைப் பாலிக்கும் படைப்புக் கடவுளராய்த் திகழ்ந்தாரென்பதில், உண்மை உறையாமலில்லை

தமிழுக்குச் சிறப்பாகவுள்ள இலக்கிய மரபினைப் பற்றி அறியாதும், தமிழ்ப்பண்பாட்டினையும் உணர்ந்திராத ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அகத்தமிழைப் பற்றியும், அகத்திணைக்குரிய பண்பாட்டு காட்சிகளையும், காதலன்பு அடைவது உயிரியற்கை எனும் அகத்து ஒழுக்கத்தின் பண்புச் செம்மையின் நுட்பத்தைப் பற்றியும் அறிவித்தால் மட்டும், ஆரிய அரசன் தமிழறிவு பெற்றவனாகத் திகழ முடியாததாகும். அவ்வாறு கூறுவது நேரியதன்று. பின்னர் எக்காரணங்கொண்டு குறிஞ்சிப் பாட்டை ஆரியவரசனுக்காகக் கபிலர் சுவைப்படப் பாடினாரென்பது ஈண்டு ஆயத்தக்கது.

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழின் இனிமைத் தன்மை தலையாயது; நிலையாயது; உலையாதது; பிறவா வாழ்க்கையினைப் பெற பேரின்பம் நல்கும் திறமும் ஆற்றலும் நிரப்பவாய்ந்தது. தமிழ் என்ற சொல்லை செந்தமிழ்ச் சான்றோர்கள் இனிமை யென்ற பொருளில் பற்பல இடங்களில் எடுத்தாண்டுள்ளது சிந்திக்கத்தக்கது.

'தமிழ்த ழீஇய சாயலவர்' (சித்தாமணி)
என்றதில் தமிழின் அழகினிமையையும்
'தமிழ் வையைத் தண்ணம்புனல்' (பரிபாடல்)
என்றதில் தமிழின் ஆற்றுநீர் ஒழுகினிமையையும்

'தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே' (கம்பர்)
என்றதில் தமிழின் இசையினிமையையும்,
'பாலேய்தமிழர்' (திருவாய்மொழி)
என்றதில் தமிழின் சுவையினிமையையும்

'தமிழெனும் இனிய தீஞ்சொற்றையல்' (மணிமேகலை) என்றவிடத்தும் தமிழின் இனிமைசான்ற பண்பினையையும் குறிப்பிடப்பட்டுள்ளது அறிந்து இன்புறற்பாலது, மற்றும் 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' எனப் பிங்கல நிகண்டு கூறுவதினால் தமிழ் இன்பம் நிறைந்தது. இனிமை சான்றது. இனிய ஒழுகலாற்றின் நயம் வாய்த்தது என்று உணரப்படும்

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்'

என்பது தமிழ்ச் சுவை தெளிந்த கவி சுப்பிரமணிய பாரதியாரின் கூற்று.

சொல்லின் உயர்வு, தமிழ் என்ற சொல்லில் உள்ள, த, ம, ழ என்ற எழுத்துக்கள், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றில் அடங்கி தமிழ் மொழியில் முப்பெரும் பிரிவுகளாக விரிந்து முப்பெரும் பொருள்களை இனிமை பயக்க விளக்கி இனிமையினையும் ஊட்டுதலான், சுந்தரரது செந்தமிழின் இனிமைப் பண்பாற்றலில் மயங்கிய இறைவன், அவர் பொருட்டு கழிபேருவகை கொண்டு தூது சென்றமை கருதற்பாற்று மற்றும் தமிழ், தூதுக்குரிய இலக்கணச் செழுமையும் நிறைவும் கொண்டு இனிமைச் சிறப்புவாய்ந்துள்ளதால், புலவர் பெருமக்கள் நலனும் வளனும் சிறக்கப் பெற, தமிழையே தூதாக விடுத்ததும் ஒருவாறு புலப்படும், என்றும் பேரின்ப வாழ்வு தந்து செழுமை வளங்கொழித்து மங்காது விளங்கும் தமிழைப்பற்றிய உயர்ந்த கருத்தினை

'தமிழுக்கு அமுதென்று பேர் — அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

என பாரதிதாசன் நயம்படப் பாட்டாகப் பாடியுள்ளார், எனவே, அமிழ்தினுமினிய தமிழ் என்பது பேரின்பஞ் சான்ற பெருமையினையும் சிறப்பினையும் குழைவினையுமுடையது என்பது பெற்றும்.

குறிஞ்சிப்பாட்டு நுதலிய பொருள் யாதெனின், அது 'தமிழ் நுதலிற்று', ஆசிரியர் நச்சினார்க்கினியர், தமிழ் என்பது களவு கற்பாகிய அகப் பொருளின்பம் எனப் புலங்கொள வைப்பார். இஃது உலகுய்யத் தோன்றி நின்று இம்மைக்கும் மறுமைக்கும் ஆன்ற துணையாய் அமைந்து பயனளிக்கவல்லது. ஈண்டு கபிலர்,

தமிழ் என்பது ஒப்பற்றதும், உயரியதும், நிலையாயதுமாகிய பேரின்பமென்பதை, குறிஞ்சித் திணைக்குரிய அகப்பொருள் மூலம் விளக்கித் தமிழ் என்பது, இனிமை, நீர்மை, அறிவு என முப் பொருள் படுப்படி புதுமையாக நாமணக்க, செவி இனிக்க நெஞ்சம் குளிர உணரவைத்துள்ள திறம் நன்கறிந்து இறும்பூதெய்தும் பெற்றியது. பொதுவாக, இப்பாட்டு உலகளாவிய விரிவும், வீறும், இணையற்ற எளிமையும் அற்புதமாய தெளிவும் உடையது

குறிஞ்சிப் பாட்டின் கண்ணுள்ள சொற் பொருட் பிணிப்பே, தமிழின் அழகினையும் வளத்தினையும் நீர்மையினையும் காட்டிடும். இப்பாட்டின் சொற்கள் கூரிய அறிவும், சீரிய நோக்கும், சீரிய சுவையும் விழுமிய விளைவும் பரந்து நிற்பன. சொற்பொருட் கருத் துக்களை இயற்கை நிலைக்கு முரணுகாதவாறு கபிலர் அமைத்து குறிஞ்சித் திணைக்குரிய முதல், கரு, உரிப் பொருள்களையும், பழக்க வழக்காற்றிலமைந்த அறிவுடைய ஒழுக்க நெறிகளையும் திட்ப நுட் பங்களுடன், தமிழ்ச் சுவை எதிர்ந்து நிற்குமாறு இசைத்து விளக் கும் வகையே தமிழின்பம் பயக்கும். அகத்தமிழ் பண்பாட்டின் கருவினை எடுத்து கபிலர் குறிஞ்சிப் பாட்டினிலே உருக்கொடுத்து உலக இயல்புக்கு ஏற்ப, உயிரானது இறைவனைச் சாரும் முத்தித் திறத்துத் தமிழ் நெறியினை விளக்கியுள்ளார். மற்றும் கபிலர், அக மென்பது கலையெனப் போற்றற்குரிய பேறு வாய்ந்துள்ளதென்ற அடிப்படையில், இலக்கிய யாழில் அகத்திற்குரிய தூய காதலின் பத்து எண்ணம் உணர்ச்சி, நுகர்ச்சி ஆகியவற்றைப் பேரின்பச் சாய லொடு இனிய ஓசை இயங்குமாறு மீட்டியுள்ளாரென்பது கண்டு அறிந்து இன்புறற்பாலது. எனவே, குறிஞ்சிப் பாட்டு இன்ப வாழ்வுக்குரிய இயற்கை நூல்; இன்பத்திற்கும் அன்பிற்கும் உரிய தெய்வ மணங் கமழும் அக நூல்; இன்ப வாழ்வின் அடைவால் வினையும் வீடு பேற்றினை விளக்கும் ஞான நூல்; காவியக் கருத்தினை யும் ஓவிய உணர்வினையும் தீந்தமிழால் வடிக்கப்பெற்ற இலக்கிய அமிழ்த நூல். இதன்கண் மறைந்துள்ள அரும்பெரும் பேரின்பப் பொருள்களை பலர் காணுமல் குருடு பட்டுள்ளது வருந்தத்தக்கது

தொல்காப்பியனாரது அகத்திணை இலக்கணத்திற்கு சிற்றிலக்கி யம் போன்று சிறந்து விளங்கிய இப்பாட்டு இயற்கை நெறிவழாது ஓசையமைதியொடு இறையுணர்வினை எழுப்பி தெய்வ மெய்ப்பாட்டு நுணுக்கங்களை தோற்றுவிக்கும் பான்மைத்து. இப்பாட்டிற்குரிய திணை குறிஞ்சியென்பதும், துறை, தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் என்பதும் உய்த்துணர்ந்து கொள்ளப்படும். இப்பாட்டு, மக்களுள் தலையாயினாரிடத்தே திகழும் அன்பு நல்லொழுக்கத்தின் பாற் சார்ந்து, இன்பத்திற்குக் காரணமாய் சிறந்து நிகழ்ந்து, அவ்

வின்பம் நிலை பெறற்கு அறம் பற்றுக்கோடாதலை விளக்கும் பெற்றிமையினையுமுடையது. காதல் வயப்பட்ட தலைவனும் தலைவியும் ஊழால் தம்தமக்கு உரியரென்னும் உறுதிப்பாடுடையராய், நல்லொழுக்க விழுப்பத்தில் சிறந்த இன்பத்திற்குரிய அன்பில் ஈடுபட்டு ஒழுகும் ஒழுக்கம் இயல்பாகவே, எவ்வுயிரிடத்தும் அன்பு செய்தற்குரிய வித்தகமும், அவ்வுயிர்களுக்கு உடனாகியும் வேறாகியும் நிற்கும் இறைபால் பற்றுள்ளம் கொள்ளுதற்குரிய வித்தாகவும் அமைந்துள்ளதென்பது தமிழ்த் துறையில் படிந்துள்ள தொன்னூலறிஞரது ஒப்பமுடிந்த கூற்றாகும்.

இறை — இயற்கை நிலைக்களத்தே, களவுக்காதலின் கற்பியலை வைத்துக் காட்டும் இக்குறிஞ்சிப்பாட்டு வாழ்வின் பேரின்பமும் வளனும் பெருக வைக்கும் மாண்பினையுடையது. இஃது அறிவு வளர்ச்சிக்கும் உயிர்க்கு உறுதிபயப்பதற்கும் உறுதுணையாவது. இப்பாட்டு தலைவன் தலைவியரது காதலுறவின் சிறப்பியல்பையும், காதலின் நுட்பப் பண்பினையும் இனிமையினையும் தூய்மையினையும், காதலன்பு நலங்கனிந்த இன்பவாழ்வுக்குரிய நல்லொழுக்கத்தினையும், இயற்கைப் பொருள்களோடு இணக்கமுற ஒளிரவைக்கும் ஓர் காதல் நாடகமென்க. பாட்டுடைத் தலைவனும் தலைவியும் உரையாடி மகிழ்ந்த காட்சிகளை மனத்திரையில் நிழலாடி நிற்குமாறு கபிலர், குறிஞ்சிக் கருப்பொருள் வாயிலாக காதலன்பினை வளர்க்கும் வகை இறும்பூதற்பாலது. மற்றும் பாட்டுடைத் தலைவன் தலைவியர்பால் நிகழும் காதலின்பத்தை இப்பாட்டினிலே முன்னிலையாகக் கொண்டு, இறைவனை நாடி உயிர் அனுபவிக்கும் பேரின்பத்தை உணர்த்தப்பட்ட அழகு அருமைப்பாடுடைத்து. எனவே, கபிலரது குறிஞ்சிப்பாட்டு இறையனுபவத்தின் விளைவினை விளக்கும் பேரின்பத்து நிலையின் விரிவு என்பது போதரும்.

காதலன்பின் வளர்ச்சியின் கரு சிறந்து கற்பு, அறத்தொடு நிற்றலென்பது அகத்தமிழ் மரபிற்குரிய தனிச்சிறப்பு. இச்சிறப்பினிற்குத் தோன்றாத் துணையாக நின்று, தலைவன் தலைவியரது இன்பியல் வாழ்வில் சிறப்பிடம் பெறுபவள் தோழியேயாவள். இவளே சிறியன சிந்தியாத முதுக்குறைவி; காதலிருவரது நலங்கருதி, அன்னாரின் விருப்பத்து சூழ்ச்சிக்குத் துணை புரிந்து, களவு கற்புக்குரிய காதலொழுக்கம் இனிது நிறைவேறத் தன் கடமைப்பாடுகளை செம்மையாக ஆற்றுவாள். 'சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே' என்பது தொல்காப்பியம். குறிஞ்சிப் பாட்டு இம்முறையில் தோழி செவிலிக்கு உரைக்கும் பாவனையாய் அமைந்துள்ளது. எனவே, கபிலர், வாழ்வின் இலக்கிய விளக்கத்தைத் தன் புலமை மாண்பும் கலைத்திறனும் தோன்ற, தோழியின் சொல்

லாட்சியின் வாயிலாக ஆரிய அரசனுக்குப் புலப்படுத்தி, அறத்தொடு அன்பினையும் பண்பினையும் இறை நலத்தையும் வளர்க்கும் அகத் தமிழை நயப்போடும் வியப்போடும் உணருமாறு அறிய வைத்தார்.

மற்றும் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால்வகை உறுதிப் பொருளுக்கு தலைமைச் சிறப்பளித்து, அவைகளையே அடிப்படையாகக்கொண்டு கபிலர் குறிஞ்சிப் பாட்டைத் தெய்வீகமான தொன்றாக (somthing divine) அமைத்து ஆரிய மன்னனது மனத்தையும் புலன்களையும் தமிழ் நெறியில் ஈடுபடுமாறு வகைசெய்தார். அறம் பொருள் இன்பங்களில் இன்ப நுகர்வு பல்லுயிர்கட்கும் பொதுவாக உளதாயினும், அவை மனனுணர்வு வாய்க்கப்பெற்று வாழும் மக்களுயிர்க்கே சிறந்து விளங்குமென்ற கருத்து கொண்டு, குறிஞ்சிப் பாட்டினிலே கபிலர், உலகியல் வழக்கினையும் புலனெறி வழக்கினையும் காணுமாறு வைத்து, புலனெறி வழக்காகிய இறை இன்ப நெறியின் உட்பொருளினை ஆரிய அரசரது உள்ளத்தில் பதியுமாறு நுண்மையும் எண்மையும் தோன்ற சுருங்கச் சொல்லி ஆழ்ந்து அகன்றதோர் அரும் பொருளினை எளிதில் விளங்க வைத்தார்.

(தொடரும்)

குற்றியலுகரம்

பேராசிரியர் சா. பாலசுந்தரம்.
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி
தஞ்சை-2

நூன் மரபினுள் தோற்றுவாய் செய்யப்பெற்ற சார்பெழுத்துக்களுள் இரண்டாவதாக ஓதப்பெற்ற குற்றியலுகரத்தைப் பற்றிய சிறப்பியல்புகளைப் புள்ளி மயங்கியல் தவிர ஏனைய எட்டு இயல்களிலும் வைத்து உணர்த்துகின்றார் தொல்காப்பியர்.

இஃது உயிர் முக்கோணங்களுள் மூன்றாவதாகிய உகர உயிரின் அகப்பாட்டொலியாகிய சார்பெழுத்தாகும். இதுவும் மேற் கூறப்பெற்ற குற்றியலிகரம்போன்றே தனிமொழியின் கண்ணும் (தொடர் மொழி) புணர்மொழியின் கண்ணும் வரும் முறைமையையும் பற்றுக்

கோட்டினையும் மொழி மரபின்கண் எடுத்துக்கூறி ஏனைய இயல்களால் இதன் இயல்பெல்லாம் தெளிய விளக்குகின்றார் அவர்.

இக்குற்றியலுகரம் பற்றி உரையாசிரியன்மாருக்கும் பின்னை வழிநூலும் புடை நூலும் செய்த ஆசிரியன்மாருக்கும் முற்காலத் தற்கால ஆய்வாளர்கட்கும் தெளிவான கண்ணோட்டமின்மையால் இவர் தம்முள் ஒத்தும் ஒவ்வாதும் கூறியுள்ள கருத்துக்களையெல்லாம் உரியவிடத்து இனிக்காண்போம்.

முதற்கண் ஆசிரியர் தொல்காப்பியர் குற்றியலுகரம் பற்றிக் கூறியுள்ள நூற்பாக்களை ஆய்வு முறை வரிசையிற் காண்போம்.

"அவைதாம்; குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தமென்ற முப்பாற் புள்ளியும்
எழுத்தோரன்ன" என்பதனால் இதன் தனித்தன்மையும்
நெட்டெழுத்திம்பரும் தொடர் மொழியீற்றும்
குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே (எழு - 36)
'இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான' (எழுத்-37)
"வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழி
தொல்லை இயற்கை நிலையிலும் உரித்தே" (எழுத்-409)

என்பவற்றால் இதுவரும் இடமும், பற்றுக்கோடும், மாத்திரை குன்றி ஒலிக்குமிடமும்,

'அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே' (எழுத்-12)

என்பதனால் இதன் இயல்பான மாத்திரையளவும்

'குற்றியலுகரம் அற்றெனமொழிப' (எழுத்-105)
'புள்ளியீற்று முன் உயிர் தனித்தியலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே' (எழுத்-138)

என்பவற்றால் இதன் வரிவடிவும் தன்மையும் புணர்ச்சியியல்பும்

சார்ந்துவரினல்லது ... தம்மியல்பியலும் (எழுத்-101)

என்பதனால் இதன் பிறப்பியல்பும்,

"குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடுமுதலும் (எழுத்-67)
முற்றியலுகரமொடு பொருள் வேறுபடாஅது
அப்பெயர் மருங்கின் நிலையியலான" (எழுத்-68)

என்பவற்றால் இது மொழி முதற்கண் வருமாறும், பொருளமைதியும்,

மூன்றுதலையிட்ட மூப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலையிட்ட முதலாகிருபஃது
அறுநான் கீற்றொடு நெறி நின்றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென்று யீரியல (எழுத்-103)

என்பதனால் இது மொழி முதலிலும் இறுதியிலும் நின்று நிலைமொழி வருமொழிகளோடு புணரும் என்பதும்

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகரம் நிலையும் (எழுத்-408)

என்பதனால் இஃது அவ்வழி வேற்றுமையாகிய இருவகைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும் வரும் என்பதும்

ஈரெழுத்தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொடர்
ஆயிருமூன்றே உகரங்குறுகிடன் (எழுத்-406)

என்பதனால் அதன் பெயர் வகையும் கூறி

152, 163, 167, 195—200, 237, 407, 411—480 ஆகிய நூற்பாக்களால் பொதுவும் சிறப்புமாகிய புணர்ச்சியியல்புகளையும் பிற நுணுக்கங்களையும் கூறி அமைத்துள்ளார். இவற்றுள் யாண்டும் இவ் உகரம் முதலெழுத்தாகிய உகரத்தின் விகாரமென்று மயங்குமாறு ஆசிரியர் கூறவில்லை.

ஆனால் பயிலுவோர் அங்ஙனம் மயங்கும் வகையில் உரையாளர்களும் ஆய்வாளர்களும் கூறியுள்ள கருத்துக்களும், கதவு, வரவு, செலவு முதலிய விதியீறுகளை முற்றுகர இயல்பீறுகக் கொண்டு முற்றுகரத்தின் கண்ணும் ஒரோவழி வருமொழி உயிர் ஏறும் என்றும்

குற்றுகரம் ஓரோவழி வருமொழி உயிர் ஏற இடங்கொடாது உடம்படுமெய்பெறும் என்றும், இன்னும் பலவாறு கூறும் கருத்துக்களும் பொருந்தாமையைப் பின்னர் வரும் நூற்பாவுரைகளால் காண்போம்.

இனி இந் நூற்பாக்களின் உண்மைப்பொருளை ஆய்ந்து காணுவதற்கு முன் குற்றியலுகரம் - முற்றுகரம் இவைபற்றிய இயல்புகளைப் பொதுவாக அறிந்துகொள்ளுதல் நலமாதலின் அவை பற்றிச் சில கூறுகின்றேன்.

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் ஆகிய முப்பதும் முதலெழுத்துக்கள் என்பதும் இவற்றுள் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிமுதலிலும் ஈற்றிலும் தனித்தும் பதினெட்டு மெய்களை ஊர்ந்தும் மொழிமூவிடத்தும் வரும் என்பதும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் தத்தம் இயல்பிற்கேற்ப மொழியிடையினும் ஈற்றினும் தனித்தும் மூன்றிடங்களிலும் உயிரெழுத்துக்களை ஏற்றும் வரும் என்பதும் வெளிப்படை.

சார்பெழுத்துக்கள் தமக்குரிய உயிரையும் மெய்யையும் சார்ந்து ஒரு மொழிக் கண்வருதலன்றி யாண்டும் தனித்து வாராவென்பதும் வெளிப்படை. இவை மொழியைச் சார்ந்து வருங்கால் ஒருகால் உயிரைப் போலவும், ஒருகால் ஒற்றைப் போலவும் இயங்கும்.

இவற்றுள் குற்றியலிகரம் உயிரெழுத்தைப்போல மெய்யினை ஊர்ந்து வருதலல்லாமல் உயிரெழுத்துக்களை ஏற்பதில்லை. செய்யுளகத்து ஒற்றுப்போல அலகுபெறாது நிற்கும். குற்றியலுகரம் உயிரெழுத்தைப்போல மெய்யினை ஊர்ந்தும் மெய்யெழுத்தைப் போல உயிர்களை ஏற்றும் வரும். கட்டளையடிக்கண் அலகுபெறாதும் ஏனையடிகளில் அலகுபெற்றும் வரும். ஆய்தம் மெய்யெழுத்துப் போல உயிரை ஏற்பதும் உயிரெழுத்தைப்போல மெய்யினை ஊர்வதுமின்றித் தனித்தேநிற்கும் ஆதலின் இதனைத் தனிநிலை என்றும் பெயர்கொடுத்து வழங்குவர். ஆயினும் இஃது ஓரோவிடத்துச் செய்யுளின்கண் அலகுபெற்று உயிர்போலவும் அலகு பெறாது ஒற்றுப் போலவும் நிற்கும். இதன் விரிவை ஆய்த எழுத்து ஆய்வுரையில் விளங்கக் காணலாம்.

இனி இக்குற்றியலுகரம் இருநிலையையும் உடையதேனும் மெய்யினை ஊர்ந்துவருதற்கண் சில வரையறையைப் பெற்றே இயங்கும். இஃது ஒரு மொழியின் முதலிலும் ஈற்றிலும் வருமேயன்றி மொழியிடையே வாராது; முதற்கண் வருங்கால்

நகர ஒற்றின் முன்னிற்கும் மற்ருெரு நகரமெய்யினை ஊர்ந்தும் மொழியிறுதிக்கண் வருங்கால் வல்லெழுத்தாறினை ஊர்ந்தும் வரும்; பிற மெய்யின்மேல் ஊர்ந்து மொழி முதலிலும் வராது; இறுதி யிலும் வராது.

இவ்வாறே தனித்தியங்கும் ஆற்றலுடைய உயிர் பன்னி ரண்டும் மொழிக்கண் மெய்களை ஊர்ந்துவருங்கால் சில வரையறை உண்டு என்பதை மொழி முதல் நிலை இறுதி நிலை பற்றிக் கூறும் நூற்பாக்களால் அறியலாம். இம்முறையில் உயிரினத்து உகரம் (முற்றுகரம்) பற்றிய இயல்பினை நோக்குங்கால் இது மொழி மூவிடத்தும் வருதலையும் மொழி முதற் கண்ணும் இறுதிக் கண்ணும் வருங்கால் வரையறுத்த சில மெய்களை ஊர்ந்து வருதலையும் காணலாம்.

''பன்னீருயிரும் மொழி முதலாகும்''

''கதநபமவெனும் ஆவைந்தெழுத்தொடும்
எல்லா உயிரும் செல்லுமார் முதலே''

''சகரக் கிளவியும் அவற்ரோரற்றே
அஐஔ வெனும் மூன்றலங் கடையே''

''உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்
வஎன் எழுத்தொடு வருதலில்லை''

''ஆ எ ஒ எனும் உயிர் ஞகாரத்துரிய''

''ஆவொடல்லது யகரமுதலாது''

எனவரும் நூற்பாக்களால் இம்முற்றுகரமானது மொழிமுதற்கண் தனித்தும் க த ந ப ம ச என்னும் ஆறுமெய்களை ஊர்ந்தும் வரும் என்பது பெறப்படும்.

''உயிர் ஔ எஞ்சிய இறுதியாகும்''

''உ ஊ காரம் நவ்வொடு நவிலா''

என்னும் நூற்பாக்களால் இம்முற்றுகரம் ஊகார ஔகார அள பெடையின்கண் தனித்தும், க ச ட த ப ற ஞ ண ந ம ய ர வ ழ ள என்னும் மெய்களை ஊர்ந்துப் மொழியிறுதிக்கண் வரும் என்பதும் பெறப்படும்.

இவ்வாற்ருன் முற்றுகரமானது மொழிமுதற்கண் குற்றியலுக ரம் ஏறும் நகரமெய்யின் மேலும் மொழியிறுதிக்கண் குற்றியலுகரம் ஏறும் ஆறுவல்வின மெய்யின்மேலும் ஏறுதற்கு உரிமையுடைத்து என்பதும் குற்றியலுகரமானது மொழிமுதற்கண் முற்றுகரம் ஏறும்

க த ச ப ம என்பவற்றுமேலும் இறுதிக்கண் ஏறும் ஞ ண ம ன ய ர ல ழ ள என்பவற்று மேலும் ஏறுதற்கு உரிமையுடையதன்று என்ப தும் தெளிவாம்.

ஆகவே குன்றம் - துறக்கம் - சுண்ணம் புகற்சி - முனைவன், என்ப வற்றுள் நிற்கும் உகரம் முற்றுகரமே என்பதும் நுந்தை என்பதன் கண் நிற்கும் உகரம் குற்றுகரம் முற்றுகரம் இரண்டற்கும் பொது வென்பதும் உரிஞு, பண்ணு, திருமு, துன்னு, தெவ்வு, மேரு சொல்லு, எழு, கொள்ளு, நகு, முசு, கடு, தபு, உறு என்பவற் றுள் நிற்கும் இறுதி உகரம் முற்றுகரமே என்பதும்

வரகு, அரசு, கரடு, மருது, உருபு, கவறு, நோக்கு, அஞ்சு, ஆடு, வித்து, செப்பு, ஏறு என்பவற்றுள் இறுதி நிற்கும் உகரம் இரண்டற்கும் பொது வென்பதும் இவ்விளக்கணமாதல் பெறப்படும். இவற்றுள் நோக்கு முதலிய ஆறும் ஏவல் வினையாயின் அவை முற்றுகரமேயாம் என்பதை பின்னர் விளக்கப்பெறும். இவ்வாறு இரண்டற்கும் பொதுவாகி நிற்கும் உகரத்தைப் பேச்சுமொழிக்கண் ஒலிப்போர் ஒலிக்கும் ஒலியளவானும் பொருளமைதியானும் சொற் றொடராயின் புணர்ச்சி வேறுபாட்டானும் எழுத்து மொழியாயின் புள்ளி பெற்றும் பெறாதும் நிற்கும் வரிவடிவ அமைப்பானும் ஒன் றன்பாற் சார்த்தியுணர்தல் வேண்டும். இவற்றையெல்லாம் மேல் வரும் நூற்பா உரைகளுள் எடுத்துக்காட்டி விளக்குங்கால் தெற் றென உணரலாம்.

இவ்வடிப்படையை ஓராமற் பெரும்பாலோர் குற்றொற்றைக் சாராமல் வல்லினமெய்யை ஊர்ந்து மொழியிறுதியில் நிற்கும் உகரத்தையெல்லாம் குற்றியலுகரமென்று கண்ணை (கருத்தை) மூடிக்கொண்டு சொல்லத் தலைப்பட்டுவிட்டதை எண்ணுங்கால் வியப்பைவிட இரக்கமே மேலோங்குகின்றது. என்செய்வது?

இனி இக்குற்றியலுகரம் பற்றிய நூற்பாக்களின் செம்பொருளை முறையே காண்போம். "அவைதாம், குற்றியலிகரம்...... எழுத்தோரன்ன" என்னும் நூற்பாவின் பொருள் முன்னர்க் கூறப் பெற்றமையின் அடுத்து நிற்கும் "நெட்டெழுத்திம்பரும்" என்னும் நூற்பாவின் பொருளைக் காண்போம்.

நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீற்றும்
குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே (எழு-36)

இதன் பொருள் :—

குற்றியலுகரம் ஈரெழுத்தொருமொழியுள் நெட்டெழுத்தினது பின்னும் இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழியினது இறுதியினும் வல்லொற்றினை ஊர்ந்து நிற்கும்.

நீற்றல் வேண்டும் என்னும் பயனிலை முதல் நூற்பாவினின்றும் அதிகாரமுறைமை என்னும் உத்தியான் தந்துரைக்கப்பெற்றது. ஈண்டுத்தொடர்மொழி எனவிதந்தமையானும் பின்னர் நெடிற்றொடர் எனக் கூறுதலானும் நெட்டெழுத்தென்பது ஈரெழுத்தொரு மொழி என்பது பெறப்பட்டது. தொக்கு நின்ற ஆறனுருபு நிலத்தகலம் என்றாற்போன்று ஒன்றியற் கிழமைக்கண்வந்தது.

நெட்டெழுத்தும் தொடர்மொழி இறுதி எழுத்தும் சார்பு, வல்லெழுத்துப் பற்றுக்கோடு இப்பர். இறுதி என்றதனான் இது மொழியிறுதிக் குற்றியலுகரம் என்பது தானே போதரும். உரையாளர்கள் சார்பினை இடம் என்பார்.

இவ்வாறு குற்றியலுகரம் தோன்றி நிற்குமிடம் இவை எனக் கூறுமல்

''நெடிலோ டாய்தம் உயிர் வலிமெலி யிடைத்
தொடர்மொழி இறுதி வன்மையூருகரம்
அஃகும், பிறமேற் றொடரவும் பெறுமே''

என உயிரினத்துள்ள முற்றுகரமே இவ்வகை மொழிகளின் ஈற்றில் வல்லெழுத்தை ஊர்ந்து நின்று தன்மாத்திரையிற் குறுகும் என்பது போலவும் பொருள் வேறுபாடின்றி யாண்டும் குறுகியே நிற்கும் என்பது போலவும் நன்னூலார் கூறுவது பிழை என்பது தெளிவரம் பேலும் பிறமேற்றொடரப்பெறும் என்றது தொடரவும் பெறும் என எதிர்மறை உம்மை கொடுத்துக் கூறியதும் பிழையாதலை ஓர்க. இதனுன் நன்னூலாரைப் பின்பற்றி எழுந்த ஏனைய இலக்கண நூலாசிரியர் கூற்றுக்களும் அதுவே என்பது புலனாகும்.

அடுத்து இக்குற்றியலுகரம் புணர்மொழியிடத்துத்தன் அரை மாத்திரையினும் குறுகி ஒரோவிடத்து வருமாறு கூறுகின்றார்.

இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பாடறிந்த புணரிய லான

இதன் பொருள் :— முற்கூறிய குற்றியலுகரமானது, நெறிமுறையறிதற்குரிய புணர்ச்சியியல்போடு இருமொழிகளுக்கிடையே தோன்றி நிற்பின் தன் அரைமாத்திரையினும் குறுகி ஒலிக்கும் இடனும் உண்டு.

இடனும் என்ற எதிர்மறை உம்மையால் குறுகாது ஒலிக்கும் இடங்களே பெரும்பான்மை என்பது போதரும்.

எ. டு :— கொக்குக்குறிது, கச்சுச்சுருக்கம், பத்துத்துடி செப்புப்புதிது. முதலாயவை குறுகும்.

குறுகாதவை. வன்றொடர் அல்லாதனவும், கொக்குப் பெரிது கச்சுக்குறிது முதலாய வன்றொடர்களுமாம்.

இவை பற்றிய விளக்கத்தை அடுத்த நூற்பாவிற்காணலாம்

உரைவிளக்கம்:— குற்றியலுகரம் என்பது அதிகாரத்தான் வந்தது இடன் என்றது சிறுபான்மையை உணர்த்தி நின்றது.

கடப்பாடு = நெறிமுறை. அறிந்த என்பது அறிவறிந்த மக்கட் பேறல்லபிற (குறள் 61) என்பதிற்போல அறிதற்குரிய என்னும் பொருள்பட நின்றது. புணரியல் = புணர்ச்சியியல்பு. ஈறுதிரிந்த ஆனுருபு ''தூங்குகையான் ஓங்குநடை.'' என்றாற்போல உட னிகழ்ச்சிப் பொருளது. கடப்பாடறிந்த என்றதன் கருத்து யாதோ வெனின்? குற்றியலுகரத்தின் இயல்பு தனிமொழியைக் காட்டி னும் புணர்மொழியிடை நன்கு புலனாகும் என்பதாம். அஃதாவது

நாகு என்னும் தனிமொழிக்கண் உள்ள உகரத்தை இதழ் குவித்துக் கூறிய வழி முற்றுகரமாயும் குவியாது சிறிது புடைபெயரு மளவிற் கூறியவழிக் குற்றியலுகரமாயும் நிற்கும். நோக்கு என் னும் சொல்பெயராயவழி அவ்வாறே இருவகையாகி நிற்கும். முனைநிலை வினையாய வழி முற்றுகரமாயே நிற்கும். இவை புணர் மொழியிடையே

"நாகுவேயொடு நக்குவீங்குதோள்''

ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல் (குறள் 1099) எனவும்

'' நாகிளங் கமுகு ''

'' இருநோக் கிவளுண்க ணுள்ளது'' (குறள் 1091) எனவும் வருவனவற்றுள், முன்னிரண்டிலும் (அலகுபெற்றுச்சீராக நிறைந்து நிற்றலின்) முற்றுகரம் என்பதும், பின்னிரண்டிலும் (வருமொழி உயிரேற இடந்தந்து நிற்றலின்) குற்றியலுகரம் என்பதும் தெற் றென விளங்குதல் காண்க.

ஆசிரியர் தொல்காப்பியர் சார்பெழுத்துக்கள் மூன்றும் அரை மாத்திரையளவுடையவை என்பதை மெய்யெழுத்தியல்போடு மாட் டெறிந்து "அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே'' எனக் கூறிப் பின்னர்

மெய்யெழுத்துக்களுள், மகரம் தன் அரைமாத்திரையினும் குறுகி ஒலிக்கும் என்றார். அருத்தாபத்தியான் ஏனைமெய்கள் திரிபுபடா எனக்கொள்ளவைத்தார். அவ்வழி, இச்சார்பெழுத்துக்கள் மூன்றும் தமக்குரிய அரைமாத்திரையிற் சிறிது திரிபு பட்டிசைக்கும் இயல்பினை ஓர்ந்து இவற்றின் இலக்கணங் கூற வகுத்துக்கொண்ட மொழி மரபின்கண், முறையே குற்றியலிகரமும் குற்றியலுகரமும் தம் அரை மாத்திரையினும் குறுகுமென்பதைப்

புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும் (எழுத்-35)

எனவும்

இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பாடறிந்த புணரியலான (எழுத்-37)

எனவும், விளக்கி, ஆய்தம் தன் அரை மாத்திரை
யினும் சிறிது மிக்கொலிக்கும் என்பதை
உருவினும் இசையினும் அருகித்தோன்றும்
மொழிக்குறிப்பெல்லாம், எழுத்தினியலா
ஆய்தம் அஃகாக்காலை யான (எழுத் 40)

எனவும் கூறியமைத்துள்ளார்.

இதனை ஓர்ந்தறியாத உரையாசிரியன்மார் தத்தமக்குத் தோன்றிய வாறெல்லாம் இவற்றிற் குரைத்த பொருள்கள் பொருந்தாமையைஅவ்வந்நூற்பாவுரையில் கண்டு கொள்க.

இனி 'இந்நூற்பா, குற்றியலுகரம் புணர்மொழியுள்ளும் வருமெனக்கின்றது' எனக்கருத்துக் கூறி அதற்கேற்ப இளம்பூரணரும், இரெட்டியாரும் பொருள் கூறியுள்ளமை சிறிதும் பொருந்தாது. என்னை ?

குற்றியலுகரம் மொழி முதலிலும் ஈற்றிலும் அமைந்து நிலைமொழி வருமொழியாக நின்று புணரும் என்பதை

''மூன்றுதலையிட்ட முப்பதிற்றெழுத்தின்
இரண்டுதலையிட்ட முதலாஇருபஃது
அறுநான் கீற்றொடு நெறிநின்றியலும்
எல்லா மொழிக்கும் ''

என்னும் புணரியல் முதல் நூற்பாவினாலும், இஃது அவ்வழி வேற்றுமையாய இருவழியாலும் புணர்ந்தியலுமென்பதை

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்

எல்லா இறுதியும் உகரம் நிலையும்"

என்னும் குற்றியலுகரப் புணரியல் மூன்றும் நூற்பாவினாலும் ஆசிரியர் ஓதியுள்ளமையான் ஈண்டும் புணர்மொழியகத்துவரும் எனின் குற்றமாம். அன்றியும் இது புணர்மொழியிடையே வரும் எனக் கூறுதொழியின் நிகழ்வதோர் ஐயமொன்றுமின்மையானும், கூறிய வழிப்பெறும் பயன் ஒன்றுமின்மை யானும் என்க.

[இந்நூற்பாவின்கண் உள்ள நிலையும் என்பதை நிறையும் என அவர்கள் கொண்டபாடம் பொருந்தாதென்பதை இதன் உரை விளக்கத்துக் கூறுவேன்.]

இனி "இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே" என மொழி மரபிற் றோற்றுவாய் செய்த குற்றியலுகரம் குறுகுமிடம் பற்றிக் கூறுகின்ற நூற்பா

"வல்லொற்றுக் தொடர் மொழி வல்லெழுத்து வருவழி

தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே" (எழு-409)

என்பதாகும்.

இதன் பொருள் :-

வல்லெழுத்து தொடரும் மொழிக்கண் உள்ள இறுதிக் குற்றியலுகரம் தொடரப் பெற்ற வல்லெழுத்தே வருமொழியாகி வருமிடத்துத் தனது முன்னைய(மாத்திரை)இயல்போடு நிலைபெறுதற்கும் உரியதாகும். (உம்மை எதிர்மறையாகலின்) நில்லாமைக்கும் உரியதாகும் என்றவாறு.

விளக்கம் ::

தொல்லையியற்கையாவது-" அவ்வியல் நிலையும் ஏனைமூன்றே" என நூன்மரபின்கண் ஓதியமாத்திரையியல்பினை.

நின்ற மொழியில் உள்ள வல்லெழுத்து எதுவோ அதுவே வருமொழி முதலாக வரும் என்பதை இந்நூற்பா நுண்மையாகச் சுட்டுகிறது. இதனை (யோகவிபாகம்)க் கூட்டிப் பிரித்தல் என்னும் (உத்தியால்) நூற்புணர்ப்பால் உணரலாம் அஃதாவது

" வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி "
என ஒரு தொடராக ஓதிப்பொருள் காணல் வேண்டும்.

எடுத்துக் காட்டு :

குக்குக் குறிது — பாக்குக் குறுமை — அச்சுச்சுருண்டது — அச்சுச்சுருள் — பத்துத்துடி முத்துத்துகள். செப்புப் புதிது—செப்புப் புதுமை எனவும். கொக்குப் புதிது அச்சுக்குறிது — பத்துக்குதிரை செப்புக்குடம் — காட்டுப்புரு. காற்றுப்புழுதி எனவும் வரும்.

இவற்றுள் நின்ற வல்லெழுத்தாக வரும் வருமொழி உகரத்தை ஊர்ந்து வரும் சொற்களுக்கு முன் நிலைமொழிக்குற்றுகரம் தன் அரை மாத்திரை யளவினும் குறுகி ஒலித்தலை விட்டிசைக்காமல் சொல்லிச் செவிக்கருவியான் உணர்க. இவைபோல்வன குறுகியே ஒலிக்கும்.

உகரமேருது பிற உயிர்கள் ஏறிவரும் வருமொழிக்கு முன்னிற்கும் குற்றுகரம் விரைந்து சொல்லுங்கால் குறுகியும் நலிந்து சொல்லுங்கால் தன் அரைமாத்திரையிற் குறுகாதும் ஒலித்தலை அவ்வாறே இசைத்துணரலாம்.

பிற வல்லெழுத்துக்கள் வரின் அவை குறுகாமலே ஒலித்தலையும் அவ்வாறே காண்க. இவை

"சேற்றுக்கால் நீலம் "

" நெருப்புச் சினந்தணிந்த "

"கோட்டுப்பூச் சூடினும் காயும் "

என வரும்வழி முற்றியலுகரமாக ஒலிப்பதையும் காணலாம்.

கான்சாயபு சண்டை

(வரலாற்றுத் திறனாய்வு)

பேராசிரியர் - சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ; எம். பில்.

00:00 தமிழகத்தின் கல்லாத எளிய மக்கள் கதைப்பாடலாக நெஞ்சில் நிலைநிறுத்திவைத்துள்ள பெருவீரர்களில் பெரும்பாலோர் மொகலாய, ஆங்கிலேய ஆளுகையினை எதிர்த்தவர்களேயாவர். அவர்களுள் தனிமனிதனாக ஆனால் எதிர்த்த இருமையரையும் கலங்கச் சிதறடித்து 'சுதந்திர' உணர்ச்சியை செயல்வடிவில் உண்மையில் செய்து காட்டியுவன் கான்சாயபு ஆவான். அவனது வாழ்க்கை முழுவதும் வீர உணர்வோடு கூடிய ''சண்டைகள்'' செய்வதிலேயே கழிந்தமையினையும். இறுதியும் சண்டையினாலேயே வந்தமையினையும் கண்ட நல்லோர் அவனை நினைவுகூறுமுகத்தான் ''கான்சாகிபு சண்டை'' எனுந்தலைப்பிட்ட. நாடோடிப்பாடலைப் பாடி வருகின்றனர். நல்லோராகிய கல்லார் பாடிய பாடலாதலின் திறமான ''புளுகுகள்'' இன்றி நடந்துமுடிந்த, கண்ட, கேட்ட, நிகழ்ச்சிகளைப் பாமரமக்களறிந்த நிலையில் 'தெம்மாங்கு' பாடல் போல், பாடிவைத்துள்ளமையைக் காணலாகும். எனவே இதனை ஓர் வரலாற்று நூலாகவே நாம் கொள்ளலாம்.

01:00 18 ஆம் நூற்றாண்டில், தமிழகத்தே ஆங்கிலக் கம்பெனியார், ஆற்காட்டு நவாப்பாக இருந்த சந்தா சாகிப்பை ஒழித்து முகம்மது அலியை ஆற்காட்டு நவாப்பாக்கித் தமிழகத்தைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றுகின்றவேளையில் அவர்களாலேயே வளர்க்கப் பெற்று, பின் வளர்த்தவர்களுக்கெதிராக மதுரையிலிருந்து எதிர்ப்புக்கொடி தூக்கி, அலைக்கழித்து இறுதியில்பட்ட கான்சாகிபுகானின் வரலாறு பரந்துபட்டது. அவனது 'சண்டைகள்' எழுதிமாளா அளவின. அவற்றுள் ஒரு குறிப்பிட்ட பகுதியினைமட்டும் காட்டி இறுதியினையும் விளக்குவதே 'கான்சாகிபு சண்டை' எனும் நாட்டுப்புற இலக்கியமாகும்.

02:00 அறிமுகம் :

தமிழர்க்கேயுரிய பழுப்பு நிறம். நெடிதுயர்ந்த உருவம். யானையை ஒத்த களத்த ஆனால் வாகான பருப்பம் முறுக்கேறிய

தசைக்கோளங்கள். பீடுநடை. எதிலும் அஞ்சாமையினையும் அடங்காமையினையும் வெளிப்படுத்தும் கண்கள். எடுத்த நாசி. குனித்த அடர்ந்த புருவங்கள். நெல்லைச் சைவர்களுக்கே உரிய தமிழ்ப்பேச்சு, பன்மொழிப் புலமையோடு கூடிய அரசியல் திறம். சுருண்டதலைமுடி. பெருந்தலை, அகன்றமுகம், நிமிர்ந்த நெற்றி, பெரும் மீசை — உயர்ந்த ஆடையா-பரத்துள்ளே தன்மானமிக்க உயர்ந்த உள்ளம் —இவற்றின் ஒருமித்த உருவம்தான் கான்சாகிபு 18 ஆம் நூற்றண்டில் ஒரு கணிசமான பகுதியினை மதுரையில் மன்னனுக்கு சழித்த மாண்பினன். சாதிசமய பேதங்கடந்த பெருந் தகை. இந்திய சுதந்திர எழுச்சிக்கு முன்னுக, தமிழக சுதந்திர எழுச்சியின் முன்னேடி —அடிகோலி. வெள்ளையரையும், ஆற் காட்டு நவாபையும் சிதறடித்து செயலிழக்கச் செய்தவன் நம் நாட்டு வரலாற்று நூலாசிரியர்களாகிய மேலைநாட்டவரால் புத்த கத்தில் எழுதக்கூட அஞ்சிய நிலையில் விடுக்கப்பெற்ற —இருட்ட டிப்புச் செய்யப்பெற்ற தமிழ்வீரன்.

02:01

வெள்ளையரை ஒருமுறை, இருமுறையல்ல, பத்துப்பதினைந்து முறை போரிட்டுக் கலக்கியவன். ஆனல் தமிழக வீரர்களின் சூழ்ச்சியினலேயே வெள்ளையர்க்கிரையாகிய நிலையில் தூக்கிலிடப் பட்டவன். அவனது பேராற்றலை வரலாற்றடிப்படையில் விளக்கு வதே "கான்சாகிபு சண்டை" யாகும்.

03.00 படிம அமைதிகள்:

கான்சாகிபு சண்டையில் காணப்பெறும் படிமங்களை மூன்று பெரும்பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளலாம். அவற்றுள் முதலா வது கானின் எழுச்சி; இரண்டாவது மறவர்கள் எதிர்ப்பு; மூன்ரு வது கானின் போராட்டம் ஆகும்.

03:01 கானின் எழுச்சியில் காணப்படும் பிற துணைப்படிமங்கள்- கான் வெள்ளையர்பால் சிறந்த புகழ்பெற்று கருமந்தான், 'கும்தான்' என நூல்கூறும் 'கம்மந்தான்' எனும் படைத்தலைமையேற்றலும், 'மாசா' எனும் பிரெஞ்சுப் பெண்ணை மணந்ததும், மதுரைக்கு வந்து குழப்பமடக்கித் தலைமையேற்றலுமாகும்.

03:02 மறவர்கள் எதிர்ப்பில், கானின் பாளையங்களில் ஒன்ருன தெற்கத்திச் சீமையின் மறவர்களாகிய சேதுபதிகள் தாண்டவராய

பிள்ளையும், தாமோதரம்பிள்ளையும் கானுடன் உறவுகொண்டாட முயல்வதும், முயற்சி தோல்வியடைய, ஆற்காட்டு நவாப்பின் உதவிபெற, முத்துவடுக சேதுபதியின் ஒப்பம் பெற்று, திருச்சி சென்று நவாப் முகம்மதலியின் பேட்டிகண்டு, படையுதவிபெற்று, மதுரைக்கு மீளல் ஆகியன காணப்பெறுகின்றன.

03:03 கானின் போராட்டங்கள் "ஏழு சண்டைகளாக" இப்பகுதியில் கூறப்படுகிறது. ஆயிரக்கணக்கில் வெள்ளையரையும், கூலிப் படைகளையும் வெட்டித்தள்ளிய கான், இறுதியில் தன் நண்பர்களாலேயே காட்டிக்கொடுக்கப்பெற்ற நிலையில் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டதோடு, உடல் கூருக்கப்பட்டு சிதைக்கப்படுகிறான். சுதந்திர உணர்வுகள் தமிழகத்தில் தலை எடுக்கத் தலைப்படுகின்றன.

04:00 வரலாறு :

இளமை : 'கான்சாகிபு' என்ற பெயர் பெற்ற இவ்வீரன் பெயரில் இஸ்லாத்தினனாயினும் பிறப்பால் இந்துந் தமிழனுவான். 'பனையூரு மாங்காய் பிடுங்கி, எனக் கானே தன் ஊரோடு தன்னைப் புகழ்வதால் — இவன் இராமநாதபுர மாவட்டத்தில் பனையூரில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவன் என்பது புலனாகின்றது. இவ் வடிப்படையிலேயே மறவர்குல மாணிக்கம் தாண்டவராயபிள்ளை

"மைத்துனா கான்சாய்பு நீலா - ஒரு

வார்த்தைநான் காராளன் சொல்லுகிறேன் கேளு"

எனவும்

"மச்சினனென்று வுரவாடி - உன்னுடைய

மாசாவைத் தங்கையென்று வுரவாடியிருந்தேன்"

எனவும்

"தங்கச்சி மாசாவே கேளு" எனவும்

"மைத்துனன் என்றல்லோ இருந்தேன் - எனக்கு

மாத்தானாய் வந்தானே"

எனவும் கானை மச்சினனாகவும், அவன் திருமணஞ்செய்துகொண்டிருந்த 'மாசா' எனும் கிறித்துவப் பெண்ணைத் தங்கையாகவும் பாவித்துக் கடிதங்கள் எழுதுகிருன்.

இளமையிலேயே வீட்டிற்கடங்காத பிள்ளையாக நீலன் எனும் செல்லப்பெயரும் மருதநாயகம் எனும் பெயரும் பெற்ற கான் வீட்டை விட்டு வெளியேறுகிருன். ''கான்சாய்பு நீலன்'' என்று இப்பாடல் கானனை அழைக்கிறது பல்லிடங்களில்.

04:01 இஸ்லாத்தைத் தழுவல்:

பல இடங்களில் அலைந்து திரிந்து கொண்டிருக்கும்போது, மூஸா அலி என்னும் குதிரை வீரனல் ஆதரிக்கப்பெற்று, அவனல் 'முகம்மது யூசுப்கான்' என இஸ்லாமியப் பெயரிடப்பட்டு இஸ்லாத்தைத் தழுவுகிருன்.

04:02 பாண்டியில் படகோட்டியாக:

தன்னுழைப்பிலேயே உறுதிகொண்ட கான் பாண்டிச்சேரியில் படகோட்டியாக தொழில்புரிகின்ருன். அவனுடன் 'மார்ச்செண்டு' என்ற பிரெஞ்சுக்காரனும் மான்சியர் டி. லா. என்பானிடம் வேலை செய்கின்ருன்.

04 : 03 காதிழந்தான்கான்:

படகோட்டித் தொழிலால் உடல் உரம் பெற்ற கான், கண்டற் கரிய உடற்கட்டோடு. பொருளீட்டமும் மிகப்பெற்ருன். மிக்க நிலையில் மாலைப்போதுகளில் அவன் தலையில்கட்டிய பட்டுக்குட்டையுடன் பிரெஞ்சுப் பெண்கள் மிகுந்திருக்கும் பாண்டிச்சேரித் தெருக்களில் யாருக்கும் அடங்காமல், வலம் வருவதையும் தன் களிமகிழ் போக்காகக் கொண்டான். ஒரு தமிழன் பிரெஞ்சுப் பெண்களிடம் கேளிக்கையாக நடந்து கொள்வதைப் பொறுத்துக்கொள்ளாத அவனது பிரெஞ்சு அதிகாரி மான்சியர் டி. லா. கானின் ஒரு காதினை அவனுக்குத் தண்டனையாக அறுத்து விட்டான்.

05 : 00 தஞ்சைப்படையில் வீரனுக:

காதிழந்த கான் பாண்டியில் தங்காது தஞ்சையின் பிரதாப சிம்மராஜாவின் படையில் சிலமாதங்கள் படைவீரனுக ஊழியம் புரிகின்ருன்.

05 : 01 கிளைவுடன் கான்:

பின் திருச்சியில் முகமதுகமால் என்ற தளபதியிடம் பணிசெய்கின்றபோது, முகமதலிக்குத் துணையாக, இராபர்ட் கிளைவுடன் ஆற்காட்டு முற்றுகைக்காக நெல்லூர் செல்கின்றான்.

05 : 02 நெல்லூர் சுபேதார் :

நெல்லூரில் சந்தாசாகிப் மகன் ரஸாசாகிப் கொல்லப்பட்ட நிலையில், கம்பெனியாரால் பாராட்டப்பெற்று சுபேதாராக்கப்படுகின்றான்.

05 : 03 வழிச்சாரி கான் :

கானின் தலைவன் முகம்மது கமால் இறந்த பிறகு, அவனது பதவியாகிய "வழியிடையில் சுங்க வரி வசூலிக்கும்" வேலையில் கான் அமர்த்தப்பட்டான். கம்பெனிக் கவர்னர் சாவெல்லியர் கானைப் பாராட்ட, கம்பெனியார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான உண்மை ஊழியனாக ஊழியம் புரிந்தான்.

05 : 04 கான் பீ. ஏ.

திருச்சி நவாப் முகம்மது அலிக்குச் செலவுப் பணம் பெறும் பொருட்டு ஆங்கிலேய ஜாக்கஸ் லா என்பானையும், அவன் மாமன் ஃபிரெண்டன் என்பவனையும் கான் அடிக்கடி சந்தித்தான். கானின் நேர்மையினையும், உழைப்பினையும் கண்ட ஃபிரெண்டன் தன்னுடைய அந்தரங்கச் செயலாளனாக அலியின் ஒப்போடு நிறுத்திக் கொண்டான். கானைத்தன் மகனிலும் அருமையாக வளர்த்தான். கான் தன்னை வெள்ளைக்காரனின் "மகனாகவே" "வெள்ளைக்காரன் வளர்த்தெடுத்த பிள்ளையோ நானும்" என்று சொல்கின்றான் பிரெண்டனே ஓரிடத்தில் கானைத் தனது வளர்ப்பு மகன் என்பதனை "வேலிக்கு நான் போட்ட முள்ளு, காலுக்குப் பகையாக வந்ததே இன்று" என்று கூறியும், நான் வளர்த்த பிள்ளையந்தக்கானன்" என நவாப்பிடம் உறுதி கூறி கானை மதுரைக்கு "கும்தானாக" அனுப்பிவைப்பதாலும் கான் வெள்ளையரின் வளர்ப்பு பிள்ளை என்பது புலனாகின்றது.

06 : 00 பன்மொழிப் பயிற்சி :

நல்ல வாய்ப்பு. கான் பயன்படுத்திக் கொண்டான். தன்ள

நிலை வளர்த்தால்தான் தன் ஆழ்த்த எண்ணங்களைச் செயலாக்க முடியும் என அறிந்தான்கான். பயன்-கான் ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துக்கீஸ் தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்றான். ஆதலின் பல்வேறு தேயத்தினரின் தொடர்பும், கருத்துரைகளும் கானிற்குக்கிட்டின. இயல்பாக இருந்த உடலுறுதி உள்ள உறுதியோடு அறிவினுறுதியும் சேரவே கான் தன்னுள் கான் சாயபினை அஞ்சத்தக்க நிலையில் வளர்த்து விட்டான்.

07 : 00 நவாப்பிடம் பணி:

பின் மீண்டும் கான் நவாப்பிடம் பணிபுரிய அவனது நேர்மையினால் சிப்பாய் ஆர்டலீ, நாயக், ஹவில்தார் போன்ற வேலைஉயர்வுகளைப் பெற்றான்.

07 : 01 காவேரிப் பாக்கச் சண்டையில் :

சந்தாசாகிப்பிற்கும், முகம்மது அலிக்கும், ஆற்காடு நவாப் பதவி குறித்து எழுந்த போட்டியில் ஆங்கிலர் முகம்மதலிக்கும், பிரெஞ்சினர் சந்தாசாகிப்பிற்கும் துணைபுரிந்தனர். ஆங்கிலப்படையில் ‘ இராபர்ட் கிளைவ் ’ ஒரு தளபதியாகப் பணிபுரியும் போது அவனது புகழையும், தன் புகழையும் வளர்க்கும் துணைவனாக கானும் இச்சண்டையில் பங்கேற்றான். அப்போது உதவி கவர்னராயிருந்த ‘ரிச்சர்டு பிரின்ஸ்’ என்பான் தன் 1751 செப்டம்பர் 15-ஆம் தேதியிட்ட இக்கடிதத்தில் கானின் வீரத்தைப் பாராட்டி அவனை இராபர்ட் கிளைவோடு தளபதியாக அனுப்பச் செய்கின்றான் காவேரிப்பாக்கச் சண்டையில் கானின் பெருவீரத்தால் வென்ளைப் படை வெற்றி பெற்றது.

07:02 திருச்சி — சீரங்கப்போரில் கான் :

இதனைத்தொடர்ந்து 1752 ஏப்ரலில் ஸ்ரீரங்கத்தில் நடந்த போரில் மேஜர் ஸ்ட்ரிங்கர் லாரென்ஸ் என்ற ஆங்கிலத் தளபதிக்குத் துணையாக இராபர்ட் கிளைவுடன், கானும் சென்று, எதிர்த்த பிரெஞ்சுத் தளபதிகள் ஜாக்குவிஸ்லா, மான்சியர் டி ஆட்டில் என்பார்களைப் புறங்கண்டான். கானின் வீரத்தைப் பற்றி 1752 மேத் திங்கள் 2-ஆம் நாளில் ‘‘டோல்டன்’’ என்பான் கிளைவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் ‘‘உங்களின் நெல்லூர் வீரர்களின் சுபேதாராக இருப்பவனைப் போன்றதொரு வீரனை நான் கண்டதில்லை’’ என எழுதிக் கானைச் சிறப்பித்து உள்ளான்.

07:03 பிறவிப் போர்வீரன் கான்!

ஸ்ரீரங்கப்போரில் தன்னாற்றலால் பிரெஞ்சுத் தளபதி மார்சியர் டி ஆட்டிலேச் சரணடையச் செய்து சந்தாசாகிப்பை ஒழித்த கான், திருச்சியிலிருந்த வெள்ளையர்க்குத் தஞ்சையிலிருந்தும் உணவுப் பொருள் தட்டுப்படாமல் கொணர்ந்து புரக்கும் கடினமான, பொறுப்பான வேலை ஏற்றான். இடையே எழுந்த பிரெஞ்சின் தாக்குதல்களையும், 'ட்யூப்ளே'யின் சதித்தாக்குதல்களையும் முறியடித்து உண்மையூழியம் புரிந்தான்.

08.00 முதல் சுதந்திரத்தியாகி—புண்ணியப்பன்:

ஆங்கிலேயனிடம் பணிபுரிந்தாலும், சுதந்திர வேட்கையினாலும், மானத்தாலும் ''ஹைதர் அலி'' எனும் மைசூர்ப்புலியின் உதவியை நாடியவன் புண்ணியப்பன் என்றபெருமகன். இவன் லாரென்ஸ் துரையிடம் துபாஷியாகப் பணிபுரிந்தவன். கான் எனுந்தமிழனும் ஆங்கிலேயனுடன் கூடிக்கொண்டு, தமிழகத்தை ஆங்கிலேயர்க்கு அடிமைப்படுத்த முனைந்துள்ளமை கண்டு கானை ஆங்கிலேயர் பகைத்து விலக்குமாறு ஓர் சூழ்ச்சி செய்தான். சூழ்ச்சியில் ஒரு பார்ப்பானைக் கொண்டு ஒரு போலிக்கடிதம் தயாரித்தான். அக்கடிதம் கான் ஹைதரலிக்கு எழுதியதாக அமைந்தது. அதில் ஹைதரலி தனக்குதவியாக - வெள்ளைப்படையினரை - ஓட்ட - உதவும் பட்சத்தில் தான் ஹைதருக்கு திருச்சியை அன்பளிப்பாக அளிப்பதாகச் செய்தி குறிக்கப்பட்டு, மிகரகசியமாக அனுப்பப்படுவதுபோல, ஆங்கிலத் தளபதியின் கையில் அக்கடிதம் சிக்குமாறு செய்தான் புண்ணியப்பன். ''ஃகில்பாட்ரிக்'' என்பான் அக்கடிதத்தினைக் கைப்பற்றி 'கானை' சிறைப்படுத்தினான். ஆனால் ''ஃகாலியட்'' என்ற நீதிபதி விசாரணை செய்து புண்ணியப்பனின் சதியினை வெளிக்கொணர்ந்து, கானை விடுதலை செய்தான். ஆங்கிலேயர்க்கு எதிராகச் சதி செய்த ''புண்ணியப்பன்'' எனும் நந்தேச சுதந்திர முதல் தியாகி 1754 ஜூன் மாதம் 1 ஆம் தேதியில் பீரங்கி வாயில் வைத்து வெடித்துச் சிதறடிக்கப்பட்டான். எனவே கானின்மீது முன்னிலும் ஆங்கிலேயர்க்குப் பற்று மிகுந்தது.

07:04 தஞ்சைப் போரில் கான்:

1754 மே 12ல் நடந்த தஞ்சைப் போரில் உணவுப்பொருள்களைப் பத்திரமாகக் காத்து தளபதியின் உயிரையும் காத்து பகைவர்களை வெற்றிகண்டான் கான். இப்போர் தஞ்சைக்கும் திருச்சிக்கும்

இடைப்பட்ட வல்லத்திற்கண்மையில் நிகழ்ந்தது.

07:05 காவிரியைக் காத்தான் கான் !

''ட்யூப்ளே''க்குப் பதில் 1753 ஆகஸ்ட் 2ல் பதிவியேற்ற ''கோடேகு'' ஆங்கிலேயரை வெற்றி கொள்ள காவிரி நதியினை திருச்சிக்கு மேற்கே உடைத்துவிடத் திட்டங்கொள்ள, அந்நிலையில், காவிரியைக் காக்கும் பொறுப்பினை ''முத்தரச நல்லூரிலி''ருந்து கானே சிறப்பாகச் செய்து காத்தான்.

08 : 01 கான் பகதூர் — பதக்கம் பெற்றான்,

1755-ல் பதிவியேற்ற ''பிகாட்'' துரையால் ஏப்ரல் மாதத்தில் தன் சீரிய ஊழியத்திற்காக சுமார் 3I அவுன்ஸ் எடையுள்ள தங்கப் பதக்கத்தினைத் தன் புகழாகப் பெற்றான் கான். இதனைப் பாடல்

'' விருது பெற்ற கானனும் அரண்மனைக்கு வந்து ''

என்ற தொடரால் குறிக்கிறது.

07 : 06 பரங்கி மலையில் வெற்றி :

பிரெஞ்சுப்படை வீரர்களால் கைப்பற்றப்பட்டிருந்த சென்னையின் பரங்கிமலையினைக்கூட கான்தான் 3 நாட்களில் பிடித்துதந்ததாக

'' முன்னெகொடுத்த பரங்கிமலைக் கோட்டை — தன்னை

மூன்று நாளைய பொழுதில் வாங்கினேனுனும் ''

எனத்தன் மனைவியிடம் கூறுமிடத்தால், பரங்கிமலைச் சண்டையும், கான் அதனை பிரெஞ்சினரிடமிருந்து மீட்டு ஆங்கிலர்க்குத் தந்தமையும் புலனாகின்றது.

09 : 01 மதுரைப் படையெடுப்பு :

''கான்சாகிபு சண்டையில்'' விளக்கமாகக் குறிப்பிடப்படுகின்ற நிகழ்ச்சிகள் இதிலிருந்தே தொடங்குகின்றன, இதற்கு முந்திய செய்திகள் எல்லாம் குறிப்பாகவே ஆங்காங்கு கூறப்பட்டது. இனி மதுரையில் 1756-ல் பிரதிநிதியாக இருந்த ஆலம்கான் மாபீ முகம்ம

தலியின் உறவினன் மாபூஸ்கானின் நிர்வாகம் சீர்கேடுற்ற நிலையில் அதனை சீர்படுத்த விரும்பிய ஆங்கிலக் கம்பெனியார் சென்னையிலிருந்த கானை படையோடு மதுரை சென்று சீர்திருத்த ஆணையிட்டனர். கானின் புறப்பாடு பற்றி

" ஆசார வாசல் வழி தாண்டி — நல்ல

அழகான சென்னைபுரி கோட்டை வெளி தாண்டி "

வருவதாக இப்பாடல் புகலுகின்றது.

ஆணை — கானின் உள்ளார்ந்த எண்ணத்தினை நிறைவேற்றும் காலத்தின் அறிகுறியாயிற்று. கான் கிடைத்த வாய்ப்பினை நழுவ விடவில்லை ஞாலங்கருதிவிட்டான். ஆயினும் தன் கருத்தினை எவருக்கும் தெரியாமல். ஹைதரலியின் படையுதவியையும், பிரெஞ்சுப் படையின் பிரதம தளபதி மான்சியர் டி மாதவ் என்பானின் உதவியினையும் மதுரையினைப் பிடிப்பதற்கு வேண்டினான். படை உதவினால் வேண்டிய வெகுமதிகள் ஹைதருக்குத் தருவதாகவும், பிரெஞ்சுக் கம்பெனியாரை தன்னுடன் வைத்துக் கொள்வதாகவும் ஆங்கிலக் கம்பெனியாருக்குத் தெரியாமல் உறுதிகூறி வேண்டினான்.

09 : 01 புண்ணியப்பன் தன்னை ஒழிக்கக் கருதிய நிகழ்ச்சி தொட்டு கானிற்கு பார்ப்பனர்கள் மீது மிகுந்த ஆத்திரம். திருச்சியைப் படையோடு சென்றடைந்த கான் திருச்சியின் ஒரு பகுதியினைச் சூறையாடிக் கைப்பற்றி அவ்விடத்திற்கு "திருச்சி நெல்லூர்" எனப்பெயரிட்டான். டின்ஹெரோனே எனும் ஆங்கிலத் தளபதியுடன் மதுரைக்குப் பயணமானான்.

09:02 ஹெரோனேவின் அல்வழி :

பாளையங்களை அடக்கி வரி வசூலித்து கம்பெனிக்குத் தர வேண்டிய ஹெரோனே. பாளையங்களிடமிருந்த தன் சொந்த நிதிக்கு கையூட்டுகளை நிரம்பப்பெற்று வருங்கால் 1756 மார்ச் 5 ஆம் தேதி பூலித்தேவனின் இருப்பான நெற்கட்டுஞ்சேவல் தகர்க்கப்பெற, பூலித்தேவனின் நண்பர்கள் முடேமியா, மியானே, நபிகான், கட்டாக் போன்ற பட்டாணியார்கள் இறக்கவே பூலித்தேவன் ஆற்காட்டு நவாப்பிடம் சின்னாட் கழித்து அடைக்கலமாக இருக்கிறான்.

08:02 பூலித்தேவனும் ஆற்காட்டு நவாப்பும் :

இதுகாறும் நமக்குக்கிடைத்திராத வரலாற்றுச் செய்தியிது பூலித்தேவன் ஆற்காட்டு நவாப் முகமதலியிடம் அடைக்கலமாக இருந்துகொண்டு, ஏனையத் தமிழகப்பாளையத்தாரைப்பற்றிய உளவு செய்திகளைக் கூறிக் கொண்டிருந்தான் எனும் செய்தியினை ''கான் சாகிபு சண்டை'' புகல்கிறது. இதனை

''இப்படியே தாண்டவராயா — அண்ணே
இருபேரும் நவாபெதிரில் போகக்கூடாது
பூலித்தேவனி ருக்கிறானண்ணே — நாமும்
போனவுடன் கோளு சொல்லுவானண்ணே''

என்ற தாமோதரம் பிள்ளையின் கூற்றும்

''மம்முதலி நித்திரைவேளை — அப்போ
மறத்தின்மகன் புலித்தேவன் துடைகுத்தியிருக்க
தட்டி எழுப்பு புலிதேவா''

என ஆங்கிலக் கம்பெனியார்கள்கூட விலகி நின்றிட ஆற்காட்டு நவாப்பின் அணுக்கக் காவலனாகப் புலித்தேவனிருக்கிறான்' நவாப் புலித்தேவனிடத்தே உளவு கேட்க,

''வந்தவர்களாறடா பூலி — அவர்கள்
வளப்பம் தெரியுமே பார்த்துச் சொல்லடா என்றான்.
இரு பிள்ளைமாரையும் பிடிக்க — தேச

புலித்தேவ மதுவுபயணஞ் சொல் லுகின்றான்,'' என்ற தொடர்கள் மறவர்களைத் தந்திரமாகப் பிடிப்பதற்குப் பூலித்தேவன் ஆற்காட்டு நவாப்பிற்குச் சொல்லித்தந்த தந்திரவுத்திகளைக் காட்டுகிறது.

இவ்வாறாக பூலித்தேவன், முகம்மதலி நவாப்பிடம் ஒற்று கூறி

வாழ்ந்த தாழ்நிலையினை கான் சாகிபு சண்டை மட்டுமே முதன் முதலாகத் தெளிவாகக் காட்டுவது என்பது 18-ஆம் நூற்றாண்டு வரலாற்றில் பூலித்தேவன் வரலாற்றின் புதிய உண்மையாகும்.

09:03 மாபூஸ்கானை திருச்சிக்கனுப்பல்:

கான் மதுராபதி அடைந்ததை

கும்பினி முரசு வெள்ளைக்காரர் — தானிம்

கூட்டிமது ராபுரியில் ஒயிலாகச் சேர்ந்தான்

எனக்கூறி மாபூஸ்கான் —

வாடைமலர் மதுரை நகர்தன்னில் — வாழும்

மதிகூகு சாயபு அவன் ஏறிட்டுப் பார்த்து

" பேசியிடர் நகர் போச்சிதென்று — தளப்

பெருக்குடனே திருச்சிணுப்பள்ளி கோட்டை "

சென்றான் எனக்கூறுகின்றது.

09:04 பாளையங்களுடன் கான்:

1756 தென் தமிழகத்தின் வரிவசூல் நிலையினை வெள்ளையர்க்கு நன்மை பயக்கும் வகையில் சீர்செய்ய கான் தென்பாண்டி நாட்டில் வெள்ளையர் படையோடு சென்று எண்ணிட இயலா நிலையில் பெரும்போர்களை, பாளையக்காரர்களுடன் செய்து சிறப்புப்பெற்றான்

09:05 1756 நவம்பர் 16-ஆம் நாள், கானிற்கு அடங்காமல் எதிர்த்துக்கொண்டிருந்த நாட்டுரிமை வீரனும் பூலித்தேவனையும் அவனது துணைப்பாளையக்காரர்களையும் கான் அடக்கப் புறப்பட்டு, முதலில் ஈஸ்வரத்தேவன் கோட்டையைக் கைப்பற்றினான். கானிற்கு உதவிய திருவாங்கூர்ப்படைகளை பாளையப்படைகள் 20-ஆம் தேதி குலைத்துச்சென்றன.

09:06 டிசம்பர் 16, 17, 18 தேதிகளில் ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டையில் தங்கிய கானின் படையினைச் சேர்ந்த 300 தீத்தாரப்ப முதலி அனுப்பிய அழகப்பமுதலிக்கு சிறப்பு செய்வது போல வந்து பூலித்தேவனின் 300 வீரர்கள் கவர்ந்து செல்கையில் சிறைபிடிக்கப் பட்ட 5 வீரர்களை, பீரங்கி முன் நிறுத்தி வெடித்துச் சிதறடித்துத் தண்டித்தான் கான்.

09:07 அதனைத் தொடர்ந்து வடகரைப் பாளையத்தைத் தீக்கிரையாக்கினான் கான். திருவாங்கூர்ப் படைகளோடு, கம்பள நாயக்கனின் ஜெகவீர கட்டபொம்மன் படைகளின் துணையையும் பெற்ற கொல்லங்கொண்டான், ஊற்றுமலைக் கோட்டை, சுறண்டை முதலிய பாளையங்களை பெருஞ்சமர்கள் புரிந்து கைப்பற்றினான்.

09:08 வாள்வீரன் கான் !

துப்பாக்கி, பீரங்கி கொண்டு போரிடுவதில் வல்லவன் கான். அதோடு வாட்போர் புரிவதிலும் நிகரற்ற பெருவீரன் கான் ஆவான், என்பதனை அவனது வீரவரலாறு நிறுவுகிறது. 1759 நவம்பர் 6 ஆம் நாள் கான் வாசுதேவ நல்லூர்க் கோட்டையினைத் தகர்த்துக்கொண்டுள்ளான். குண்டுகளும், வெடி மருந்துகளும் தீர்ந்துவிட்டன. எதிரிகளின் ஆற்றலைக் கான் நெருப்பினைப்போல் நேரிடையாகவே அழிக்க முற்படுகிறான். ஆம் கையில் வாளெடுத்து, பகைவரிடையே புகுந்து. ஆயினும் கோட்டையைக் கைப்பற்ற இயலாது திரும்பினான்.

09:09 கானின் ஏகாதிபத்தியம் :

1760 ஜனவரியில் மாபூஸ்கான், பூலித்தேவனைப் பிரிந்து வெள்ளையரிடம் சென்றுவிடவே, கானின் வலிமை பெருகுகிறது. 1761 ஜூன் மாதத்தில் மணப்பாட்டில் தன்படைகளைக்கொண்டு கம்பளப்பாளையத்திற்குதவிய டச்சுப்படைகளை ஓடஓட வெருட்டினான் பணியாத பாளையங்கள் எல்லாம் கானிற்குப் பணிந்து வரி தந்தன.

09:10 1765 ஆகஸ்டு மாதத்தில் கும்பினி மேலிடத்தார்க்கு, கான், மதுரை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் வரி வசூலிக்கும் உரிமையைத் தனக்கு 700000 ரூபாய்க்குத் தருமாறு கேட்டுக் கடிதம் எழுதினான்.

09 11 கானின் செல்வப் பெருக்கினையும், பெரு வீரத்தையும், மதுரையில் அவன் நடத்திய நிர்வாகத்தினையும் சந்தேகித்த கம்பெனி மேலிடம் கானைத் தம்பால் திரும்பிவிடுமாறு ஆணையிட, முதன்முறையாக கம்பெனியாரின் ஆணையைக் கான் புறக்கணித்து விடுகிறான்.

(தொடரும்)

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. **அரங்க. வே. சுப்பிரமணியம்**, பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
பொழிற்றெண்டர்

2. திரு. **எஸ். நடராசன்**, எம். எல். ஏ., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்

3. திரு. சித்தாந்த கலாநிதி ஒளவை. சு. **துரைசாமிபிள்ளை**
தமிழ்ப் பேராசிரியர், மதுரை.

4. திரு. வித்துவான். க. **வெள்ளைவாரணனார்**,
துணைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

5. திரு. வித்துவான். பி. **விருத்தாசலம்**, எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

6. திரு. வித்துவான். ச. **பாலசுந்தரம்**, துணை முதல்வர்
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

7. திரு. வித்துவான். சி. **கோவிந்தராசன்**, பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்

8. திரு. வித்துவான். மீனு. **இராமதாசன்**,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவர மேல்நிலைப்பள்ளி, கரந்தை, தஞ்சாவூர்.

Regd. No. TN / TJ / 17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளி நாடு
1. ஆண்டு வரி	—	10—00	12—00
2. தனி இதழ்	—	0—90	

சங்க உறுப்பினர்

திங்கள் வரி	0—25 காசுகள்
ஆண்டு வரி	3—00
ஆயுள் வரி	100—00

சங்க நூல் நிலைய உறுப்பினர்

ஆண்டு வரி	1—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள் :

நெல்லை வருக்கக்கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணா	0—25
பரத சாத்திரம்	1—60
கவியரசு நினைவு மலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் — (பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்-பொதுப்பாயிரம் உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ்நூல் — சுவாமி விபுலானந்தர்	25—00
,, (அரை காலிகோ கட்டு)	27—00
கட்டுரைப்பொழில் (மணி விழா மலர்) சாதா கட்டு	12—00
ஷை காலிகோ கட்டு	15—00
மெய்ஞ்ஞானத்தின் கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	1—00
நக்கீரர், ந. மு. வேங்கடசாமி நாட்டார். (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00

ஆசிரியரும் வெளியிடுபவரும் திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ., கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613002. அச்சிடுபவர், திருமதி. S. நிர்மலா, அன்னை அச்சகம், 1734, காந்திசாலை, தஞ்சாவூர் - 613002.